602

உ

சிவமயம்.

கணபதி துணை.

ஸ்காந்த புராண கீர்த்தனை.

(இரண்டாவது பாகம்.)

சம்பவகாண்டம்—1.

இஃது

இராமநாதபுரம் சிவகங்கை

என்னும் உபயஸமஸ்தான வித்துவான்

பெருங்கரை

பிரும்மஸ்ரீ கவிகுஞ்சர பாரதி

அவர்களாலியற்றப்பட்டு

அவர்கள் பேரன்

சென்னை ஹைகோர்ட்டு டிரான்ஸ்லேடர்

N. கோடீசுவரய்யர், B. A.,

அவர்களாற் பதிப்பிக்கப்பட்டது.

Madras:

PRINTED AT THE SCOTTISH PRESS.

1914.

Copy Right Registered.

Q26:41
N14
180085

ஈசன் இரதியின் வேண்டுகோளுக்கிரங்கி மன்மதனை எழுப்பி அவன் உருவம் இரதிக்குமட்டும் தெரியும்படிக்கும் மற்றவர்கட்குத் தெரியாதிருக்கும்படிக்கும் அருளியபின் உமையுடன் கைலைசென்று அந்தப்புரத்து நெடுநாள் அன்புற்றுறைய சூரன்செய்வாதையால் தேவர் வந்து முறையிட்டதைக்கேட்டுத் தன் நெற்றிக்கண்ணி லிருந்து ஆறு பொறிகளைவிடுக்க அவைகளை வாயுவும் அக்கினியும் சரவணப்பொய் கையிற் சேர்க்க அவை ஆறு குழந்தைகளாயுன மதல்.

விருத்தம்.

மாமணஞ்செய் தினிதிருந்த சிவனை நோக்கி
மதனையெனக் கருளுமென விரதி கூறச்
சாமியருட் பார்வையினு லவனும் வந்தான்
சகலருக்கு முருவிலியாய் ரதிக்குமட்டுங்
காமர்வடி வாயிருப்பா யெனப் பணித்துக்
கயிலைகிரிக் குமையுடனே விடைமேற் சென்று
பூமருவந் தப்புரத்து ணெடுநா ளன்பு
பொருந்திட்டா ரதிமகிழ்வுற் றிருந்திட் டாரே. (யக)

பின்னும் விருத்தம்.

சுந்தரப் பரம னுமையொடு மிருப்பச்
சூரன்செய் வாதையாற் றேவர்
சூழ்ந்துமா லயனைத் தாழ்ந்துநின் றிறைஞ்சச்
சூழ்ச்சிசெய் தநிலனை யனுப்ப
நந்தியான் மெலிந்து வந்தது தெரிந்து
நான்முகன் மான்முத லெழுந்து
நற்கயி லாய வரைபுகுந் தோல
நவிலவப் பரமனு முவந்து
விந்தையோ ராறு முகமதாய் நெற்றி
விழிகணின் றறுபொறி விடுக்க
வெம்மையுற் றுளரு மமரரைத் தேற்றி
விடையவ னுரைத்தசொற் படியே
செந்தழ லிறைகாற் றுணையொடுஞ் சுமந்து
திரைதருங் கங்கையில் விடுப்பச்
செஞ்சர வணத்துட் சென்றவை யாறு
திருவுரு வாயமைந் தனவே (உய)

(யிகூ) கீர்த்தனம். இராகம் - காபி—ஆதிதாளம்.

பல்லவி.

திருஅவதாரஞ்செய்தார் - தேவாதிதேவர்

அனுபல்லவி.

உரமிகுமசுரரை - யொழித்துத்தேவகணத்துள்
மருவுங்கவலைதீர - மலர்ச்செஞ்சரவணத்துள் (திருஅவ)

சரணங்கள்.

(க) பகரரியசற்குண பரிபூரண னந்த
பரம்பொருளானதருட் சுரந்தினிதுறைந் திந்த
செகதலத்தினில் யோக
சித்திதரும்வை போக
தகைமைபொருந்து மோக
சண்முகவடி வாக (திருஅவ)

(உ) மாதவமுனிவர்செய் மகமெங்கும்நிறை வேற
வானவர்களெல்லோரு மகிழ்ந்துதன்பதி யேற
வேதமறையோர் பாட
மெய்யன்பர்கள்கூத் தாட
பூதலத்தோர்கொண் டாட
புலவர்பாமாலை சூட (திருஅவ)

(ங) ஆயநவக்கிரகங்கள் சுபஸ்தானத்தி லிருக்க
துய்யமதியமுதந் துளித்துவாயிற் பெருக்க
சேயர்களாகிக் கஞ்ச
செழுமலரான மஞ்ச
தேயினியகண் டுஞ்ச
சித்தர்கள்கண்டி றைஞ்ச (திருஅவ)

(ச) ஐங்கரனுன்முக னதிவிஷ்ணு ருத்திர
னருண்மகேசுவரன்சிவ னறுவர்களும்வி சித்திர
அங்கம்வேறுக நேர்ந்து
அற்புதமாகச் சார்ந்து
செங்கதிரொளி வார்ந்து
சிந்தையிற்களி கூர்ந்து (திருஅவ)

(ரு) முழுமலர்களின்மொய்த்து முரல்வரிவண்டு போலே
முகமலர்களிலுற்ற முந்நான்குகண்க ளாலே
எழினீர்முத்தஞ் சிதற
விருட்கிரௌஞ்சங் குதற
சுழலுற்றுளம் பதற
சூர்மங்கையர் கதற (திருஅவ)

18085

அக்குழந்தைகளுக்குக் கார்த்திகைப்பெண்கள் ஸ்தன்யபானம் செய்வித்தலும் நவசக்தி மார்களிடத்தில் இலக்கத்தொன்பது வீரர் உதித்தலும்.

விருத்தம்.

சீருருவ மானபர னுருவ மாகியே
செஞ்சரவ ணத்திருக்கத்
தேவர்களெ லோருமிப் பாலரபி விருத்தியைச்
சிந்திக்கு மளவில் வன்னக்
காருருவ மாயனருள் கூருமொழி தப்பாது
கார்த்திகைப் பெண்கள் வந்தக்
கான்முளைக ளத்தங்கள் கைவளைய லொலியுறக்
கனிவுபெற் றினிதெடுத்துத்
தாருலவு கொங்கையமு தூட்டநற் குமுதவாய்
தன்னில்வைத் துண்டுபால
சந்திரனென வேதழைத் தந்தமுற வேயொன்று
தவழுமொன் றிசைகள்பாடும்
பேருருவ மாயொன்று விளையாடு மொன்றுளரல்
பேசுமொன் றிருகைகொட்டிப்
பின்னடிந டக்குமொன் றின்னன்கத ரும்பாலர்
பெருமையா ரறிவர்மாதோ. (உக)

(உஉ) தீபதை. இராகம் - மத்தியமாவதி—ஆதிதாளம்.

(க) அறுமீன்பெண்கள்வளர்த்த சிறுவரொன்றுபத்துநூ
றுயிரமாயுருவங் கொண்டாரே - யதை
யுறுதியாகவெல்லோரு நிறைபரப்ரும்மமென்று
உவந்துமிகவுங்காட்சி கண்டாரே

(உ) முந்தெழுந்தபொறியைக் கண்டுமையும்பயந்து
முனைந்துதேவர்மேற்சினங் தொடுத்தாளே - நீங்கள்
எம்தம்சேர்க்கையைப்பிரிந் திடச்செய்தீர் மகவில்லா
திருப்பீர்களென்றுசாபங் கொடுத்தாளே

(ங) சாபமிட்டுச்சிவன்மேற் கோபங்கொண்டம்பிகைதன்
காலிற்சிலம்பொலிக்க வோடவே - அதின்
தீபரத்னஞ்சிதறும் போததிலொன்பதுபெண்
செனித்தல்கண்டரனருள் நாடவே

(ச) அந்நேரமேயொன்பது கன்னியர்களுங்கர்ப்ப
முடைந்திருப்பதையம்மை நோக்கினு - ளெழி
லுன்னுந்தன்னுருவான மின்னிடையார்கருப்ப
முதிக்காதிருக்கச்சாபந் தாக்கினள்

(ரு) அருட்கண்ணுலுற்றசாபம் பொறுக்காநவசத்திய
ரரனடியைப்பணிந்து போற்றினர் - தனியே
விருப்பமுற்றுமையுட னிருக்கும்பொழுதுநீங்கள்
விளம்புவீரிதையென்றுசாற்றினர்

(சு) வெருவிவலிபொரும லருவிமுத்தப்போன்முக
வேர்வையுற்றுரொன்பது மாணர்கள் - காலை
யிரவியினெளிபோலே மருவிமுகத்தினின்றும்
இலக்கவீரருற்பத்தியானர்கள்

(எ) நிருத்தனுமையோடன்புற் றிருக்கநவசத்தியர்
நேர்ந்துவணங்கிநின்றுபறந்தார்கள் - செழுந்
திருக்கண்கண்டவருக்குத் தீங்கில்லையென்பதுபோற்
செல்வநவவீரர்கள்பிறந்தார்கள்

(அ) வாகைமிகுந்தவீர வாகுதேவனற்குண
மாமணியிடத்தில்வந் துதித்தானே - கரு
மேகநேர்குழன்முத்து வல்லியிடத்தினின்று
வீரகேசரிவந்து குதித்தானே

(கூ) ஏர்பெருகும்வீரம யேந்திரனெழிற்புஷ்ப
ராகவல்லிபானின்று வந்தானே - யதி
வாரமிகுவீரம கேசன்கோமேதக
வல்லிவயிற்றினின்று வந்தானே

(ய) வீரபுரந்தரன்வை டூரியவல்லிசெய்த
மெய்த்தவத்தினுல்வந்து கதித்தானே - சுக
வாரிவச்சிரவல்லி வயிற்றில்வீரராக்கதன்
வந்துபுவியினின்றன் புதித்தானே

(யக) மரகதவல்லியின் றிருவயிற்றினில்வீர
மார்த்தாண்டன்பிறந்து மகிழ்ந்தானே - செல்வத்
துரைவீரராந்தகன் பவளவல்லியிடத்திற்
றேன்றிமிகவுமெழில் திகழ்ந்தானே

(௰உ) நீலவல்லியிடத்தில் வீரதீரனுற்றதை
நிலைபெற்றனைவர்களும் பார்த்தாரே - ஜெய
வாலகுமரருக்குத் துணையாமிவர்களென்று
மதித்துமனதிலின்பம்பூத்தாரே

ஈசன் உமையுடன் சரவணம்சென்று குமரர்களைக்கண்டு மகிழ்தல்.

விருத்தம்.

நவவீரர் பிறந்தரனைத் தொழுது நிற்க
நலஞ்சிறந்த விலக்கத்தோ ருடனே சென்று
சவுரியஞ்சேர் சரவணச்செல் வருக்கு நீங்கள்
சாதகஞ்செய் வீர்களென்றுஞ் சத்தி மாரைப்
புவிபுரந்த தலைவியின்பா லிருப்பீ ரென்றும்
புகன்றுமையோ டெழுந்துசர வணஞ்சென் றீசர்
சிவவடிவ மாகியமைந் தரைக்கண் டுள்ளந்
திகழ்ந்திட்டார் விடையினின்று மகிழ்ந்திட்டாரே (உஉ)

(உக) கீர்த்தனம். இராகம் - மோகனம் —ஆதிதாளம்.

பல்லவி.

பாலர்களைவந்துகண்டாரே - சிவனுமையும்
பரவசமிகுந்துகொண்டாரே

அனுபல்லவி.

காலையிளங்கதிர்கள் போலுயர்வடிவொடுங்
கஞ்சச்சரவணப்பூ மஞ்சத்தில்விளையாடும் (பாலர்)

சரணங்கள்.

(க) மாமுகங்களோராறு மலர்க்கரங்களீராறுங்
கோமளச்செவிசேருங் குண்டலங்களின்சீருங்
காமயில்கள்கண்டு சீராட்டுவதுஞ் - சிறைக்
க்ருவரிவண்டுகள் தாலாட்டுவதும் - வெண்
சாமரைகவரிக ளாட்டுவதும் - நிறை
தண்மதியங்கண்ணுடிகாட்டுவதும் - ஆன (பாலர்)

(உ) கார்த்திகைப்பெண்கள்வந்து காதலுடனுவந்து
ஆத்திரமாய்மகிழ்ந்து அணைத்துமுச்சிமுகந்து
பூத்தசெழுமுலைப்பால்கொடுப்பதுவும் - சேயர்
புறங்கையினுற்றள்ளிவிடுப்பதுவும் - பின்பு
வேர்த்துமழுதும்முகங்கடுப்பதுவும் - ஓடி
வெறுந்தரையில்விழுந்துபடுப்பதுவும் - ஆன (பாலர்)

(ரு) ஆத்துமந்தானேமைந்த னுகுமென் றிசைமுந்தச்
சாற்றுமுயர்வேதாந்தத் தனிப்பொருளானதிந்த
மூர்த்தியாகுமென்றும்பருரைப் பதுவுங் - கண்ட
முனிவர்கள்மனமதைக்கரைப் பதுவும் - பால்
வார்த்துண்டதுபோலுள்ளகிறைப்பதுவுஞ் - செழு
மலர்மழைவானவரிறைப் பதுவும் - ஆன (பாலர்)

உமை குழந்தைகளைச் சேர்த்தணைக்க அவை உடலொன்றும் முகமாறும் பன்னிரு கரங்களுங்கொண்ட ஒரு குழந்தை ஆக அதை நோக்கி உமையாள் தனத்தில் நின்றும் பெருகியபால் சரவணத்தில் சிந்த அப்பாலை மீன் வடிவாயிருந்த பராசரரிஷி குமாரர்கள் உண்டு சாபம் நீங்கிப்பரங்கிரிசேரப் பிறகு ஈசன் உமா சமேதனாய் திருமைந் தனுடன் கைலைசென்று அம்மைந்தன் பெருமையை உமைக்குரைத் தல்.

விருத்தம்.

கண்டவுடன் பரமனருகிருந்த செல்வி
கைமலரா லாறுபுதல் வரையுஞ் சேர்த்துக்
கொண்டணைத்த பொழுதுமுக மாறும் வெற்றிக்
குவைப்புயமீ ராறுமுட லொன்று மாகித்
தண்டைசிலம் பொலிப்பநின்ற மகவை நோக்கித்
தடமுலைப்பால் சுரந்தொழுக முனிவன் மைந்த
ருண்டறுவர் தந்தையிட்ட சாப நீங்கி
யோர்ந்திட்டார் பரங்கிரியைச் சார்ந்திட் டாரே. (உரு)

பின்னும் விருத்தம்.

பரனருள்கொண் டறுவருங்குன் றடைந்தா ரப்பால்
பரமனுங்கார்த் திகைநல்லீ ருங்க ளுளில்
விரதமிருந் தோர்க்கின்ப மருள்வோ மென்று
விளம்பியுமை மைந்தனொடுங் கயிலை சேர்ந்தார்
தெருணவவீ ரர்களிலக்க வீர ரோடுந்
திருவிளையா டல்கள்குமரன் புரிய வீசன்
றருமமைந்தன் பெருமைதனை யுமைமின் கேட்கச்
சாற்றுவான் செவிக்கமுதா யூற்று வானே. (உ௬)

(உஉ) கீர்த்தனம். இராகம் - தோடி—நுபக தாளம்.

பல்லவி.

சுந்தரமைந்தன் மகிமை நானே
சொல்லக்கேளுமை மானே. அதி (சுந்த)

அனுபல்லவி.

சந்ததம் நமதன்புகதித்த - தாரகப்ரும்மமாய் வந்துதித்த. (சுந்த)

சரணங்கள்.

(க) ஸர்வஞ்ஞத்வம்ஸர் வேசுவரத்வம் ஸர்வநியந்த்ரத்வம்
ஸர்வாந்தர் யாமித்வம் ஸர்வகற்ப கத்வம்
ஸர்வசக் தீத்வமான ஷண்முகத்தின் மகத்வம்
ஸர்வபரி பூர்ணத்வமாய்த் தழைத்திடுமிது வேதத்வம். (சுந்த)

(உ) முக்திமெய்மொழி யென்றனுறு மூலவெழுத்தும் நேரே - யுன்
புத்திரனு ரெழுத்தாமெனப் புகழ்ந்தெவருஞ்சொல் வாரே [றன்
சக்தியோடறு முகமே - நான் - றுனென்றுமதிப் பாரே
நித்யவஸ்துவி தாகுமென்றுநீ நிர்ணயமாகநினைத்திதைப்பாரேன் (சுந்த)

(ங) வனச்சரவணத் துதித்ததாற்சர வணபவனென லாமே-செழும்
புனற்கங்கைபெறக் காங்கயனென்று புகழ்ந்துரைத்திட லாமே-ஆறு
கனற்பெண்கள்முலைப் பால்கொடுத்ததாற் கார்த்திகேயனு - மாமே
யினித்துநீயெடுத் தணைக்கக்கந்தனென் றேத்தினபேர்மன தார்த்திகள்
[போமே (சுந்த)

கந்தர் இலக்கத்தொன்பது வீரரொடுமெழுந்து திருவிளையாடல் புரிதலும் அப்பொழுதுதன்னை அசுரனென்றெண்ணி எதிர்த்த தேவர்களைச்சங்கரித்தலும்.

விருத்தம்.

சத்தியிதை யறிந்துமன மகிழ்ந்தா ளப்பாற்
சண்முகவேள் கயிலையின்றாழ் வரையிற் சென்று
மெய்த்துணைவ ரோரிலக்கத் தொன்ப தான
வீரரொடு மெழுந்துமனத் துவகை கொண்டு
மத்தமிகு சூர்குலத்தை யொழித்துத் தேவர்
மாநகரிற் குடியேற வைக்க வேண்டி
யத்தனுமை பதமலரைத் துதித்துக் கொண்டா
டல்கள்செய்தார் பலவிளையா டல்கள்செய் தாரே (உகூ)

(உங) கீர்த்தனம். இராகம் - பந்துவராளி—ரூபகதாளம்.

பல்லவி.

விளையாடினார் - கந்தர் - விளையாடினார் - மிகு
விஜயப்பிர பலமெய்த்திட
விறன்மெய்த்துணை வர்கண்மொய்த்திட (விளை)

அனுபல்லவி.

களைகணுயிர் காக்கும் பெரிய
கடவுளென்றனைவோர்க்குந் தெரிய
காட்சிகொடுத்து - மாட்சியடுத்து
ககனத்தினி - லுலவிப்பொரு - கயிலைப்பெரு - வரையுச்சியில் (விளை)

சரணங்கள்.

(க) கனகமேருவிலஷ்டநாகங் களைவடமெனப் பூட்டி - பல
கண்மருவியமணிரதமெனக் கரங்கொண்டிழுத்துக் காட்டி - இரு
ளினங்கொளஞ்சனமலையைக்காலினு லெறிந்தந்தரத்திலோட்டி - தாவி
எட்டிப்பிடித்தங்கஷ்டகிரியை ஏந்திஅம்மனை யாட்டி - எழு
சினைமுகில்களைச்சேர்த்துப்பிழிந்து முனைபெருங் காற்றில் - எழச்
சிதைத்துப்பஞ்சுபஞ்சாகவேயெங்கும் சிதறிடத் தூற்றி - மார்பில்
அனலொளிக்கொடிமின்னலைப்பூணா லணியென ஏற்றி - வானி
லசைவொடுநவக்கிரகங்கள்நடக்கும் திசைகளை மாற்றி - உயர்
பனகசயனனுலகினும்சென்று பாய்ந்தெழுந்தரனுலகிற்போய்நின்று
பரசக்தியோடறுவக்திர - பரமப்பிரளய ருத்திரர்
திருநெற்றியிலெழுசித்திர - வுருவத்தொடுவெருபுத்திரர். (விளை)

[கத்

(உ) திறத்துருவன்சக்கரத்திருக்குஞ்சூத் திரத்தைப்பிடித்திட்டார்த்து - மே
திரளூறுமிடிக்குலங்களையும்ரத் தினமணியெனக்கோத்து - தோளிற்
றரித்துக்கண்ணாடியெனச்சந்திரனைத் தருவித்தழகுபார்த்து - மலர்த்
தடக்கையில் வீணையெடுத்திசையமு தங்கள்செவியில்வார்த்து - குஞ்
சரத்திற்கற்பகமலர்த்தொடைகளை வருக்கமாய் முடித்து - ரஞ் [சிச்
சிதநவரஸமொழுகுஞ்சிங்கா ரப்பதங்களும் மடித்துச் - சபை
நிருத்தனுருக்கொண்டுவெந்துநடனந் திருத்தமாய்நடித்துக் - குரல்
நீட்டிக்கவடிப்பாடிவீரரோ டோட்டங்கள் பிடித்துப் - பச்சைப்
பரிக்கதிர்திசைமாறியொடுங்கப் - பதுங்கியேயஷ்டகஜமுநடுங்கப்
பணிலத்தொகுதிகண்முற்றியே - பவளப்பலமணி சுற்றியே
புணர்மைக்கடல்களையெற்றியே - புவனத்ரயமது சுற்றியே (விளை)

(௩) கசனத்திந்திரசாபத்தைச்செழுங் கரத்தினாலெட்டியெடுத்துத் - தாரா
கணங்களையுண்டையாக்கிக்குறிப்புக் காட்டுமிடத்திற்றொடுத்து - நகை
யிகல்செய்வதுகண்டசுரனிவனென் றெதிர்த்துத்தேவர்வந்தடுத்துப் - [பன்
னிருபுயத்தினுஞ்சரவருஷங்க ளிடைவிடாமலேவிடுத்து - மணத்
தகைமலர்கள் கொண் டகமதனிலர்ச் சனைபுரிவதுபோலே - படுஞ்
சரத்தைக்கண்டையன் சிரித்துத்தன்னிச்சா சத்தியினாலே - யொரு
சிகியெனுங் கணைதெறித்திந்திரனைத் திகைக்கமண்மேலே - வீட்டித்
திறல்வருணனக்கினியெமனையுஞ் சிதைத்துமப்பாலே - வருந்
தொகையமரர்கள்தமையும் விரட்டித் - துடிக்கக்கதை கொண்டடித்துப்
சொலுமெண்டிசை - நிலைவிண்டிட [புரட்டிச்
சுரர்மங்கையர் - துயர் கொண்டிட
வுலகெங்கினும் - அனல்மண்டிட
உரகன்றலை - அலைவுண்டிட. (விளை)

நாரதர் தேவர்களிறந்ததை பிரகஸ்பதியிடம் சொல்ல அவர் ஷண்முகனைப் பிரார்த்தித்துத் தேவர்களை எழுப்பவேண்டல்.

விருத்தம்.

வித்தகனுங் குமரசர வணவேள் செய்த
விளையாட்டுப் பூசல்வினைப் பூச லாகி
யத்தலத்தி னமரரெலா மடிந்து வீழ
வரமகளிர் முறைபுகன்று கதறு மோசை
சுத்தமுனி நாரதன்கண் டுற்ற வாறு
தூயவட மேருவிற்சென் றுரைக்கக் கேட்ட
புத்திமிகு தெய்வகுரு குமரன் பாதம்
போற்றுவான் மிகவணங்கிச் சாற்று வானே. (உசு)

(உச) கீர்த்தனம். இராகம் - காம்போதி—அடதாளம்.

பல்லவி.

ஐயனே கிருபைசெய்யவேணும் - உன்ற
னடைக்கலங் காத்திடுங் காணும். (ஐயனே)

அநுபல்லவி.

னையுந் தேவர்மேற்கோபஞ் - செய்குவதென்னகண்டோ
நாக்கைக்கடித்தபல்லைத் - தாக்கியுடைப்பா ருண்டோ (ஐயனே)

சரணங்கள்.

(க) தீயவசுரருக்காய் நீசெய் யிந்திர ஜாலம்
தெரியாமலுனைச்சமர் - பொருதினதென்ன கோலம்
வீயும்படிக்குப்புத்தி - விளைந்ததவர்கள் காலம்
வினைப்பகுதிகள் தீர - நினைப்பாய்நீ யனுகூலம். (ஐயனே)

(உ) மசகங்களைப்பொருதி - விசயஞ்செய்வதோ வீரம்
மலைப்புயவசுரரைத் தொலைப்பதல்லவோ சாரம்
இசையுமுன் பெருமையைத் - திசைபுகழ விந்நேரம்
ஏறப்பார்த்தகண்ணாலே யிறங்கப்பார்ப்பதுன் பாரம். (ஐயனே)

(ங) பெற்றபிள்ளைகள்குற்ற - மெத்தனைதான் செய்தாலும்
பேணிப்பொறுத்துமன்னை பூணணிவது போலும்
சிற்றறிவானவிந்தத் - தேவருக்காக நாலும்
தெரிந்த நீயேரக்ஷணை புரிந்திந்திரன் செங்கோலும். (ஐயனே)

ஷண்முகன் அனுக்கிரகத்தால் பிழைத்தெழுந்த தேவர்கள் அசுரவாதைகூறி முறையிடல்.

விருத்தம்.

தெய்வகுரு விந்தவிதந் துதிக்கக் கந்தன்
சிறுநகைசெய் தருட்பார்வை நோக்கத் தேவர்
மெய்வசைசே ருயிர்சிறந்து கைகள் கூப்பி
மிகவணங்கி வாய்புதைத்தங் கசுர ராலே
நைவதுதீர்த் தருளெனத்தே வருக்கெ லாஞ்சே
நாதிபதி யாகிச்சூர் தொலைத்து நீங்க
ளுய்யும்வகை யருள்வோமென் றிசைக்க நெஞ்சன்
புதிக்கின்றீர் முறைகள்சொல்லித் துதிக்கின் றாரே. (உஎ)

(உரு) கீர்த்தனம். இராகம் - சாவேரி—ஆதிதாளம்.

பல்லவி.

கார்த்திகேய மூர்த்தி - இன்னமும் நீயே
காப்பதுனது கீர்த்தி.

அநுபல்லவி.

பேய்த்தனமாகவுன்னோ - டார்த்துச்சமர் தொடுத்த
பிழைக்குணங்கள்பொறுத்துத் - தழைக்கவுயிர் கொடுத்த. (கார்)

சரணங்கள்.

(க) அசுரரிடர்புரியத் திசையெங்கு மோடியொளிந் தோமே - நாங்க
ளாலைக்கரும்பெனவே சாலத்துயர் கொண்டு நைந்தோமே - யினிப்
பசையிலையெங்களுக்கே - யிந்தப் - பாரம்பழியுமுனக்கே - கடு
விசைமிகுந்தபல - நிசிசர கனைகளை
வேர்களைந்தமரர் குலமெனும் பயிர்களை. (கார்)
[ஒன்றும்

(உ) நெருக்கிடைகளுண்டாகிப் பருத்திபடாப்பாடெல்லாம் பட்டோம் -
நீச்சுநிலையில்லாம லாக்ஷிசேர்பொன்னுலகை விட்டோம் - அதி
வருத்தத்துக்குடம்பெடுத்தோ - முள்ள - வளமையும்பறிகொடுத்தோம் - ஒ
ரரைக்கணம்யுகமென்ப தறிந்துனது கருத்தி
லடிமைகொண்டினியெங்கள் - குடியைநிலை பொருத்தி (கார்)

(ங) தாரகன்கண்டத்தினிற் கார்வண்ணன்சக்கரத்தைத்தரித்தான் - நீர்த்
தடத்திலெங்களைமச்சம் பிடித்துவரச்சொல்லியேவரித்தான் - உள்ள
சீர்குலைந்திடவானே - ரென்று - ஜெனித்ததிதற்குத்தானே - பட்ட
தோரொருதுயரென்று லுரைத்துநின்பால் விரிப்போம்
உயிர்கொண்டினியெப்படி - வியனுலகில் தரிப்போம் (கார்)

தேவர்கள் முறையைக்கேட்ட ஷண்முகன் அவர்களுக்கு
அபயமளித்தல்.

விருத்தம்.

இன்னவகை வானவர்கண் முறைகேட் டைய
னீராறு மலர்விழிச்செங் கருணை பூத்துப்
பன்னெடுநா ணீங்களுற்ற துயர மெல்லாம்
பகலவனைக் கண்டபனி போல நீங்க
வுன்னுபணிக் குலங்களெனு மவுணர்க் கெல்லா
முவணவடி வாகியிட ரொழித்து நாமே
பொன்னுலகுக் கரசுமுடி தரிப்போ மென்று
போதித்தா ரபயமலர் சாதித் தாரே (உஅ)

(உகூ) **கீர்த்தனம்.** இராகம் - மோகனம்—ஆதிதாளம்.

பல்லவி.

பயப்படவேண்டாம்நீங்கள் - வானவரே - யெங்கள்
பரமசிவனுக்கன்ப ரானவரே

அனுபல்லவி.

வியப்புறும்படிக்கென்றன் - புயத்திறங் காட்டுறேன்
வீரவசுரருடன் போர்செய்து வாட்டுறேன்
உயிர்ப்புவிடவொட்டாம லதிர்த்துநின் றோட்டுறேன்
உம்பருலகில்ஜெயஸ் தம்பத்தை நாட்டுறேன் (பய)

(க) மத்தகசத்திரளி லுற்றசிங்கம்போற் பாய்ந்து
வயிரமிகுமசுர ருயிர்நிலையையா ராய்ந்து
சித்திரவதைசெய்து வெற்றிமாலைகள் வேய்ந்து
தீயவடவைக்கனல் போலச்சினந்து காய்ந்து
வைத்தடிபெயர்க்கவொட் டாமலே யிறுக்குறேன்
மலைமலையாயுருளத் தலைகளை யறுக்குறேன்
நெற்றிமூளையைத்தேங்காய்நெற்றென நொறுக்குறேன்
நிருதர்கள்குலமுழுதையுங்கரு வறுக்குறேன் (பய)

(உ) செங்குருதிவெள்ளங்கள் - பொங்கிக்கடலை மூட
தேர்கணிரைநிரையாய் - வாரிக்கப்பல்போ லோட
கங்குங்கழுதுநாடக் - கவந்தங்களுங்கூத் தாட
கதித்ததலைகளைப்பே யெடுத்தெறிந்துபந் தாட
எங்கும்பூதப்படைத்த ளங்கள்விட் டடிக்கிறேன்
எற்றியாயிரத்தெட்டண் டத்தையு மிடிக்கிறேன்
சங்கந்தொனித்துநின்று ரங்கொண்டு பொடிக்கிறேன்
சருவசங்காரஞ்செய்துகறுவத்தை முடிக்கிறேன் (பய)

(ங) முக்கண்ணர்புன்னகையான் முப்புரத்தைச் சுட்டதும்
முதலிலுங்கணிமித்தம் மதனனெரி பட்டதும்
தக்கன் றலையையறுத் தக்கினியி லிட்டதும்
சண்டன்மார்பினிற்சினங் கொண்டுதைத்து விட்டதும்
மெய்க்குந்தந்தைதொழிலை மக்கிங்கில்லாமற் போமோ
வித்தொன்றுபோடப்பூவின் மற்றோர்பயிருண் டாமோ
அக்ரமமிஞ்சியழி யாதவரெவர் தாமோ
அதஞ்செய்யாமலினிமேன் மிதமிஞ்சவிடு வோமோ (பய)

பிறகு ஷண்முகன் கந்தவரையில் வீற்றிருக்க, நாரதர்செய்த யாகத்திலெழுந்த அஜத்தைக்கந்தன் வாகனமாய்க்கொள்ளல்.

விருத்தம்.

வானவரை யிவ்வாறு தேற்றி வெள்ளி
வரையருகிற் கந்தவரை யெனப்பே ரிட்டு
ஞானகுக னங்கிருந்தான் சுவர்க்க மீது
நாரதன்செய் மகத்தெழுந்த மேடஞ் சீறித்
தானவன்போல் வருதல்கண்டு வீர வாகு
தனைவிடுத்தங் கயனுலகிற் புகுந்த வாட்டைப்
பூனையெனப் பிடித்துவந்து தேவர் துன்பம்
போக்கினான் வயப்பரிய தாக்கி னானே (உக)

பிறகு கந்தன் பிரும்மாவைச் சிறையிட்டுத் தானே நான்முகப் பிரும்மாவாய் உலகசிருஷ்டி செய்தல்.

(உ௰எ) திபதை. இராகம் - தோடி—அடதாளம்.

(க) முனிவுடனேவந்த மறியைவயமாக்கிப்பின்
முனியைவேள்வி செய்வதற் கேவினான் - துணைப்
புனிதவீரர்கள் சூழக் குமரவேள் கயிலைக்கோ
புரமுகப்பினில் நின்று லாவினான்.

(உ) உலவியங்கிருக்கையில் மலரவன்கயிலைசென்
றுவந்தரனைப்பணிந்து கொண்டானே - பின்பு
மலைமணிவாசலில்வந் துலவுங்குமரசர
வணபவனையுங்கண் ணுற் கண்டானே.

(ங) கண்டிவனோர்குழந்தை யென்றெண்ணங்கொண்டு நின்று
கையஞ்சலிசெய்துகும் பிட்டானே - சினங்
கொண்டுநகைசெய்தந்த முண்டகன்றனைக்கந்தன்
குறித்து நீயாரென் றுரைத் திட்டானே.

(ச) உரைத்திடவுமுலகம் படைக்கின்ற நான்மறைக்
குரியவனெனமொழிந் திட்டானே - ஆனாற்
றிருந்தும் பிரணவத்துக் கருத்தஞ்சொல்லென வேதன்
றெரியாமனின்று திகைத் திட்டானே.

(ஞ) மறைப்பொருளறியாமல் விழிக்குமயனைத்தளை
யூட்டிச்சிறைக்கூடத்தி லடைத்தானே - வான
முறைப்படி நாளுமுயி ரனைத்தையுந் தானேகந்த
மூர்த்திவினோதமாய்ப் படைத்தானே.

விருத்தம்.

பிரமனை யிவ்வா றருஞ்சிறைப் படுத்திப்
பெருமைசேர் கந்தவேள் வரைமே
லொருகர மதனிற் கண்டிகை யணியு
மொருகர மீதுகுண் டிகையு
மிருகர மதனல் வரதமோ டபய
மேற்றறு முகமுமீ ரிரண்டு
திருமுக மாகித் திசைமுகன் றனைப்போற்
சிருட்டிசெய் தருளினன் றனியே. (௩௰)

கந்தன் பிரும்மாவைச்சிறையில் நின்றும் விடுவித்து ஈசனுக்குப் பிரணவோபதேசம் செய்து ஸாமிநாதன் அல்லது தகப்பன்ஸாமி என்றபேரடைதல்.

(உ௰அ) திபதை. இராகம் - பைரவி—ஆதிதாளம்.

(க) தேவர்களிதுசொல்லத் தெரிந்து ஸ்ரீ தரனுதி
சிவனடியைப்பணிந்து போற்றினன் - கந்தன்
பூவிலயனைச்சிறையிட்டுலகம்படைக்கும்
புதுமையைவிவரமாய்ச் சாற்றினன்.

(உ) திருமாலுரைகொண்டயன் சிறைவிடுக்க நந்தியைச்
சிவனனுப்பவவனுஞ் சென்றானே - நந்தி
யுரையறிந்துகுமர னயனுக்குத்துணையாக
உனையுஞ்சிறையில்வைப்பே னென்றானே.

(௩) அந்தச்சேதியறிந்து நந்திகணங்கள்சூழ
அரனுங்குமரனிடம் நாடினன் - எழிற்
கந்தனெதிர்கொண்டுடன் - வந்துபணிந்துதந்தை
கழலிணையைமுடியிற் சூடினன்.

(௪) பணைத்ததோளின்மகனை யணைத்துவந்துசுந்தரப்
பதுமசிங்காதனத்தி லேறினன் - ஈசன்
இணக்கமுடன்குகனை நோக்கியயனைச்சிறை
யிட்டதென்வகையென்று கூறினன்.

(ரு) இசையும்பிரணவமுண ராதிருப்பவனுல
கினிலியலுடல்படைத் திடல் தானே - பருங்
குசவனுருவங்களும் பலபண்டங்களுஞ்செய்யுங்
குணம்போலவன்செய்தொழி லென்றானே.

(சு) முத்தொழிலிலொருவ னைத்தளையிட்டிகழ்ந்து
மொழிந்தாயென்றரன்கோப மெடுத்தானே - கந்தன்
சத்திவீரவாகுவை விடுத்துமயன்விலங்கைத்
தறித்துக்கூட்டிவந்துமுன் விடுத்தானே.

(எ) மலரயன்சிவனடி வணங்கிக்குமரன்செய்த
வருத்தத்தைச்சொல்லிக்கண்ணீ ருதிர்த்தானே - யினி
நலமாயுனதுஸத்ய வுலகஞ்சென்று சிருஷ்டியை
நடத்துவாயென்றரனும் விதித்தானே.

(அ) பின்புமகனையழைத் தம்புயனறியாத
பிரணவம்நீசொல்லென நவின்றானே - மெய்ப்பா
யும்பர்மகிழச்சிரக் கம்பஞ்செய்துகொண்டதற்
கோமென்றிசைந்தனன்சண் முகன்றானே.

(கூ) அன்னைசெவியின்முன்னஞ் சொன்னமொழியையந்த
ரங்கமாய்ச்சொல்லவேணு மென்னவே - யந்தச்
சின்மயகுருசீட மரியாதையாகக்கேட்கத்
திருமூலத்தைக்குமரன் பன்னவே.

(ய) தத்துவந்தனைச்சொல்ல வத்தன்மகிழ்ந்துகையாற்
றழுவியணைத்துமுத்த மிட்டானே - பெரு
மெத்திசையும்புகழத் தகப்பன்சாமிநீயென்
றியாவருமறியப்பே ரிட்டானே.

(யக) அண்டரெல்லோருமிதைக்கண்ட திசயங்கொண்டு
அவரவரிருக்கைபோ யுற்றாரே - ஞானக்
குண்டிகைமுனிவரும் ப்ரணவமந்திரமதைக்
குகனிடமுபதேசம் பெற்றாரே.

(யஉ) தந்தைகயிலைபுகக் கந்தவரையிற்சிங்கா
தனத்தின்மனங்களிப்புற் றிருந்தாரே - மகிழ்ந்
தந்தவேளைமான்மகள் சுந்தரவல்லியொடு
மமுதவல்லியுந்தவமிருந்தாரே.

தன்னைமணம் செய்யத்தவஞ்செய்த திருமால்புதல்விகளாகிய அமுதவல்லி, சுந்தரவல்லி இவ்விருவர்களைப்பிறகு மணம் செய்வதாய்க் கந்தன் வாக்களிக்க அவ்விருவர்களும் முறையே தெய்வகுஞ்சரியாகவும் வள்ளியாகவும் அவதரித்துவளர்தல்.

விருத்தம்.

தவமிருந்த மால்புதல்வி யிருவர்க் காகச்
சண்முகவேள் கயிலையின்றாழ் வரையிற்சென்று
சிவனடியை நோக்குமிரு வரில்வா னாளிந்
திரன்மகளா யமுதவல்லி மாதும் பூமேன்
மவுனமுனி மகளாய்ச்சுந் தரியுஞ்சென்று
வாழ்ந்திருங்க ளுங்களையா மணஞ்செய்வோமென்
றுவந்துரைத்த படியிருவர் பிறந்தங் கங்கே
யுறைந்திட்டார் மனதிலன்பு நிறைந்திட் டாரே. (௩௧)

பிறகு கந்தன் கயிலைசென்று அரனுமை யருகில் அமர்ந்திருக்க அச்சமயம் தேவர்கள் சூர்வாதைபொறுது முறையிடல்.

விருத்தம்.

வானுத லமுத வல்லியை யயிரா
வதங்கொடு போய்மனோ வதியில்
வளர்த்திடத் தெய்வ யானையென் றெழிற்பேர்
வழுத்தினர் சுந்தரி மாது
நீணிலத் தொண்டை நாட்டினில் வேள்வி
நெடுமலை வள்ளியின் சார்பில்
நிதியெனக் கண்டு கானவர் வளர்க்க
நிறைபெயர் வல்லியென் றிருந்தாள்.
மாணெழிற் கந்த வரைக்கும ரேசன்
மகிழ்வுடன் கயிலையிற் சென்று
பதிபுனை தந்தை தாய்தனைப் போற்றி
மருங்கினி லமர்ந்திடு மந்நாள்
சேணுல கரசன் மாலயன் முதலோர்
திருக்கயி லைக்குள்வந் தணுகிச்
சிவனடி பணிந்து சென்னியிற் செங்கை
சேர்த்தனர் கூவியார்த் தனரே. (௩௨)

(உகூ) திபதை. இராகம் - காபி—அடதாளம்.

முறையோமுறையோ முப்பரம்பொருளாய்
நிறையுஞ்ஜெகதீசனே நின்கிருபையருளாய். (முறை)

(க) கொற்றசூர்வாதையா லெய்த்துநைந்தோமே
நித்யகண்டந்தீர்க்காயு ளாகிவந்தோமே. (முறை)

(உ) உரித்தாமுயிர்மேலாசை வெறுத்துலேந்தோமே
வரிப்புலிதுரத்திய மான்போல் நைந்தோமே. (முறை)

(ங) எங்குமசுரர்பிர பஞ்சமாய்ப்போச்சே
தங்கநிழலில்லாமற் றவித்திடலாச்சே. (முறை)

(ச) இளைத்தபேரைக்கைதூக்கா திருந்திடப்போமோ
வளர்த்தகிளியைப்பூனை வசஞ்செய்யலாமோ (முறை)

(ரு) ஈசனடியவருக் கிடருறலாமோ
ராசனிருக்கப்பட்ட ணங்கொள்ளைபோமோ (முறை)

(சு) பொடிக்கப்புரமெரித்த புன்னகையிலையோ
துடிக்கவசுரர்தலை துணிப்பதுமிலையோ (முறை)

(எ) கொடுத்தநந்திசாபத்தை விடுத்திடவேணும்
அடித்தகையாலெங்களை யணைத்திடுங்காணும் (முறை)

ஈசன் தேவதைகளுக்கு அபயமீந்து ஷண்முகனை தேவசேனாதிபதி ஆக்கி, பதினொரு உருத்திரர்களை ஒன்பது படைக்கலமாகவும் சக்தியை வேலாகவும் செய்துகொடுத்து அசுரரைச்சயித்துவரச்சொல்லல்.

விருத்தம்.

மாயன்முதல் வானவர்கண் முறைகேட் டையன்
மலர்க்கரத்தா லபயப்ர சாத மீந்து
சேயனெனுஞ் சண்முகனை யழைத்துத் தேவர்
சேனாதி பதியாகப் பட்டங் கட்டி
ஆயபதி னொருருத்ரர் தமைமூ தண்டத்
தந்தகனுக் கந்தகனாய் விளங்கி நிற்குந்
தூயபடை யெனச்சத்தி வேலு மாகத்
தொடுத்திட்டார் மகிமைசொல்லிக் கொடுத்திட் டாரே(கூயகூ)

(௧௰) கீர்த்தனம். இராகம் - மத்தியமாவதி—அடதாளம்.

பல்லவி.

சேயா என் துரையே - அசுரர்களைச்
செயித்திங்குவருவாயே - அருமைச்சேயா

அனுபல்லவி.

மாயாச்சூர்களை னுஞ்சிங்கத்திரளினில்
வாய்த்தசரபம்போற் பாய்ந்து - கடை
யார்த்தகனலெனக் காய்ந்து - எதிர்
வாய்த்தோர்நிலையையா ராய்ந்து - முனை
வாய்ந்து - வாகை
வேய்ந்து - அருமைச் (சேயா)

சரணங்கள்.

(௧) சேகரமாம்பெரும் பூதப்படைகள்
திரைகடல்போற்சூழ்ந்து கொண்டு - வர
ஓகைபெறும்வீர வாகுவொடும்லக்கத்
தொன்பது வீரரு முண்டு - அதி
வாகுபெறும் நந்தி யுக்ரதண்டனண்ட
வாபரணனுடன் மண்டு - வி_
நாகவீரன்ழற் கண்ணன்சிங்கமாசே
நாதிபரோடுந்தி ரண்டு - அவர்க்
காதரவாய்மொழி விண்டு - அந்தப்
பாதகர்மீது நீ தெண்டு - செய்து
கொண்டு - ததி
கண்டு - அருமைச். (சேயா)

(௨) சத்திவைவேலிது நித்தியமுன்தனைத்
தாய்போலினிதுடன் காக்கும் - இஷ்ட
சித்திசேர்தோமரம் வாள்குலிசம்புங்கம்
சீராழித்தண்டுவில் லார்க்கும் - மழு
வுத்தமசூலமா தேவனரன் ருத்திர
னேங்குசங்கரனிகல் தாக்கும் - நீலன்
வெற்றிமயானனுன் மத்தவிசயன்வல்
வீமன் பவோற்பவன் சேர்க்கும் - கொன்றைத்
தாமன் கபாலிதோல் போர்க்கும் - சௌமிய
ஞமிவருன்படை யாக்கும் - பகை
தீர்க்கும் - புகழ்
ஏர்க்கும் - அருமைச். (சேயா)

(ங) வேதத்திறம் பஞ்ச பூதத்திறம் மனோ
வேகத்திறமையுங் கூட்டி - வானோர்
ஓதியவிஞ்சைப் பலங்கொண்டொருலக்ஷம்
ஓங்கும்பரித்தேரைப் பூட்டிச் - சென்று
வாதுசெய் சூரன் இருக்கும் புரத்தை
வளைத்தமரிற்றிறங்காட்டி - யுன்ற
னேதுவினாலவன் செய்திடுமாயங்கள்
யாவையும் பஞ்சுபோலோட்டி - யந்தக்
பாவியவுணரை வீட்டி - தேவ
காவலனை முடி சூட்டி - இன்ப
மூட்டி - நிலை
நாட்டி - அருமைச். (சேயா)

கந்தன் இப்படைகளைப்பெற்று வாயுவினால் ஸாரத்தியம் செய்யப்பட்ட மனோவேக இரதத்தில் ஆரோகணித்து தனது செல்வ மாமன் விஷ்ணு ஸமேதனாய் அசுரர்மீதுபடையெடுத்துச் செல்லல்.

விருத்தம்.

இன்னது சொல்லி யீந்த வெழிற்படை யாவை யும்பெற்
றன்னையோ டையன் றன்னை யணிவலங் கொண்டு மாயோன்
பன்னுரை கொண்டு வாயு பரிதனை நடத்தத் தேர்மேற்
றன்னிக ரில்லாச் செவ்வேள் தாவினன் மேவி னனே. (ரு௪)

குறிப்பு.—இரண்டாவது சரணத்திற் சொல்லிய பதினொரு உருத்திரப் படைகளின் விபரம்.

மாதேவன்	...	தோமரம்.	மயானன்	...	சக்கரம்.
அரன்	...	வாள்.	விசயன்	...	தண்டு.
உருத்திரன்	...	குலிசம்.	வீமன் / பவோத்பவன்	}	வில்.
சங்கரன்	...	அம்பு.			
நீலலோகிதன்	...	அங்குசம்.	கபாலி / சௌமியன்	}	மழு.

ஆக உருத்திரர்கள் பதினொருவரு மொன்பதாயுதங்களானவாறறிக.

(௩௧) கீர்த்தனம். இராகம் - தர்பார்—திரிபுடை தாளம்.

பல்லவி.

இரதங்கொண்டானே - ஷண்முகன்படை
யெடுத்துச்சென்றுனே.

அனுபல்லவி.

வரதன் சிவனடியை வணங்கியே விடை பெற்று
வானவரை ரெக்ஷிக்க மனதிற் கிருபை யுற்று
அரஹர வெனச்சிவ னடியார் துதிக்க முற்று
மாதித்த ஞெளிபோலே சோதிப்பிரபை சுற்று. (மிரதங்)

சரணங்கள்.

(க) மெத்தத்தவம்புரிந்து அத்தனருளாற் பண்டு
மேதினிதனிலழி யாதவரங்கள் கொண்டு
மத்தமிகுந்தெவ்வுல கத்தினுஞ்சென்று வெட்டி
மட்டில்லாமலாயிரத் - தெட்டண்டங்களுங் கட்டி
வானுள்ளோரொடுங்க - மும்மூர்த்திக
வானவர் நடுங்க - பொடிப்பொடியா
யெற்றிப்பொன்னுலகைக்கோ - ளூத்தியலற விட்டு
இந்த்ரன்மகனைச யந்தனைச்சிறை யிட்டு
வைத்தவவுணனச்செ குத்துவல்லுயிர் வாட்ட
வன்மத்தையொழித்தெங்குந் தன்மத்தைநிலை நாட்ட (இரதம்)

(முருகக்கடவுளுடன்சென்ற பூதப்படைச்சிறப்பு.)

(உ) செக்கர்வானிறம்போலே சிவந்தமணிச் சடையர்
திரண்டசந்துருள்போலச் சுருண்டகுழ லுடையர்
அக்கும்பவழமுங்கோத் தணிந்தகண்டித் தொடையர்
ஆலகாலம்போலொளி காலுமழுப் படையர்
அடற்கனல்விழியார் - இடியேறுபோ
லெடுத்திடுமொழியார் - விண்பிறையென
வக்ரதந்தர்கண்மலை யிற்குகையெனும் வாயர்
வண்ணமிகுந்ததிரு வெண்ணீறணிந்த காயர்
விக்ரமமுட்னேயொ லிக்குங்கடலை யொத்த
வெள்ளமிரண்டாயிரந் துள்ளும்பூதர்கள் சுற்ற (இரதம்)

(அவர்கள்தரித்த அஸ்திரசஸ்திரச் சிறப்பு.)

(௩) அங்குசமுசலங்க ளத்திரவேலாயு தங்கள்
அழிக்கும்பாசுபதங்கள் எழிற்குலிசாயு தங்கள்
துங்கபாசம்பிண்டியி லங்குவாளாயு தங்கள்
தோமரங்கள்பரிசை நேமிசூலாயு தங்கள்
தொடுக்குஞ்செங்கரத்தார் - பகைவேர்கல்லி
யெடுக்குமுக் கிரத்தார் - அண்டங்கண்முத
லெங்குங்கலங்கவெற்றிச் சங்கமுழங்கி யார்க்க
இறைக்குஞ்செந்தூளிகள்விண் - மறைத்தேழ்கடலுந்தூர்க்க
மங்குலினொலிபோன்மு ழங்கியார வாரித்து
மண்டிவருஞ்சேனையைக்கண்டுமனம் பூரித்து (இரதம்)

(௪) கந்திருவர்கள்வித்யா தரர்கள்நாகலோ கத்தர்
கருடர்கிம்புருடர்கின் னரர்களுரகர் சித்தர்
அந்தணமுனிவர்கள் சிந்தைமெய்ப்பரி சுத்தர்
ஆகம்புளகமுற்ற யோகியர்சிவ பத்தர்
ஆசிகள்கிறைக்க - கற்பகமலர்
வீசிநின்றிறைக்க - அந்தரமெங்குந்
துந்துபிகண்முழங்கத் தந்த்ரியாழிசை பாடச்
சுந்தரரம்பைய ரிசைந்துநடன மாட
முந்துங்க்ரவுஞ்சகிரி கந்துகந்தாய் வெடிக்க
முடுக்குமசுரர்க்கெல்லா மிடக்கண்டோளுந் துடிக்க (இரதம்)

கந்தன் வீரபாகுதேவரை முதலில் தாரகனோடு போர்செய்ய அனுப்ப அவரும் படையுடன்செல்ல பூதப்படையும் அவுணப்படையும் கைகலத்தலும் வீரபாகுதேவருக்கிளைய அஷ்ட வீரரும் தாரகனும் போர் புரிதல்.

விருத்தம்.

சாமிமுன் க்ரவுஞ்ச மலைதனைக் காணச்
சதமகன் வெருவநா ரதனுந்
தடவரை யடைந்தோர் மயக்குறச் சிலையாய்த்
தமிழ்முனி சபியவுணனையுந்
தேமலர்த் துளவன் றிகிரியை யணியாய்ச்
செருவினிற் களமதி லணிந்த
திடநகர் மாயா புரிதனை யாளுந்
திணிகொடா ரகனையுஞ் செயித் தாற்

பாமரனுகுஞ் சூரனைச் சயித்தல்
பாரமின் றென்னலும் வீர
பாகுவை யழைத்து விசுவகன் மாவாற்
பணித்திடு மிரதமுங் கொடுத்து
நீமுனம் படையோ டெழுந்துபோர் புரிபின்
னிருதனை யழிக்கநான் வருத
னிசமெனப் புகன்ற வேலவன் பதத்தை
நினைந்தன னமர்க்கெழுந் தனனே. (௩௫)

(௩௨) தீபதை. இராகம் - கல்யாணி—ஆதிதாளம்.

(க) தீரன்குமரன்சொல்ல வீரவாகுதேவர்பின்
றிரைகடற்படைகொண்டு நடந்தாரே - யதி
கோரமிகுங்க்ரவுஞ்சந் தாண்டிமாயாபுரிக்
கோட்டையைச்சுற்றிவளைந் தடர்ந்தாரே.

(உ) வளைந்துமதிலைச்சுற்றி யிருந்தகாவலர்களை
வாட்டியடித்துமண்மே லரைத்தாரே - மன
துளைந்துதூதுவருங்கண் டெழுந்துமக்கணத்தினி
லோடிப்போய்த்தாரகனுக் குரைத்தாரே.

(௩) அங்கதுகேட்டுமனம் பொங்கிக்கசமுகவ
னழற்பொறியெனக்கண்கள் சிவந்தானே - பருஞ்
சிங்கம்புதையைவிட்டெ ழுந்ததுபோற்படைகள்
செறியத்தேரினிலேறி வந்தானே.

(௪) மிக்கவாயிரவெள்ளம் பூதப்படைகள் சூழும்
வீரரனைவரையுங் கண்டானே - கண்டு
கொக்கரித்துச்சிரித்தி லக்கோநமக்கிங்கிந்தக்
கொசுகுத்திரளென்றெண்ணங் கொண்டானே.

(௫) உக்கிரங்கொண்டவனி ருக்கும்போதசுரர்க
ளொறுத்துப்பூதப்படையோ டெதிர்த்தாரே - பல
புட்குலங்களில்ராஜா ளிக்குருவிகள்போலே
பூதத்தலைவர்பாய்ந்து மிதித்தாரே.

(௬) தண்டுதோமரங்களும் பிண்டிபாலமும்விட்டுத்
தானவர்சாரதர்மே லிறைத்தாரே - கடுங்
குண்டுமலையைக்கல்லிக் கொண்டசுரப்படையிற்
கூடிச்சாரதர்வீசி நிறைத்தாரே.

(எ) சிலையிற்கணைகள்பூட்டி நிலையற்றுவிழும்படி
தெய்வப்படையசுரர் விடுத்தாரே - பல
மலையற்றதுபோற்சூர்கள் தலையற்றுவிழும்படி
வாளிதொடுத்திவர்கள் கெடுத்தாரே.

(அ) பின்னும்பூதர்களந்த வவுணப்படைகள்தம்மைப்
பிடித்தலறும்படிக்குத் தாக்கினர் - இன்ன
முன்னதமானதேர்கள் கரிகள்பரிகளையு
முதைத்துநொடிக்குள்பொடி யாக்கினர்.

(கூ) ஆனைத்தலையவுணன் சேனைத்தளங்களும்போ
யழிந்துபிணக்குவையாய் விழுந்ததே - விழுந்
தீனத்தசைநிறைந்து கானத்தாறுகள்போ
லிரத்தமும்கரைபுரண்டெழுந்ததே

(ய) ஞாளிநரிகளங்கா தாளிகொண்டுதங் களி
னங்களுண்டிடவிருந் திட்டவே - கன
கூளிபேய்களும்ரண காளிகளுந்தின்றுடல்
கொழுத்துமன்ஞ்சலித்து விட்டவே.

(யக) இந்தவிதமாய்ப்பூதப்படையாலசுரப்படை
யிலக்கமற்றசேனைகண் மாய்ந்தவே - யேங்கிப்
புந்திகலங்கிமிஞ்சி நின்றபடைகளெல்லாம்
புருவைக்கூட்டம்போற்புறஞ்சாய்ந்தவே.

(யஉ) மாய்ந்ததையுந்தன்படை சாய்ந்ததையுந்தாரகன்
மனங்கொண்டழல்போற்சீறித் துடித்தானே - உள்ளங்
காய்ந்துசினத்துடனே பாய்ந்துலகெங்கும்வென்ற
கதையைத்தன்கரத்தினிற் பிடித்தானே.

(யஙு) பிடித்துப்பூதப்படைகள் துடித்துத்துடித்துவீழப்
பேய்ச்சூராவளிபோனின் றடித்தானே - மணி
முடிச்சிரங்கள்கரங்கள் கண்டந்துண் டங்களாக
முனைவீரருயிரையுங் குடித்தானே.

(யச) சின்னபின்னமாய்ப்பூத மன்னர்மடியக்கண்டு
சேனைத்தலைவர்வந்தங் கடுத்தாரே - கிட்டி
மன்னும்வில்லைவளைத்துத் துன்னுமம்புகள்பூட்டி
வருஷமாரிபோலவே விடுத்தாரே.

(௰௫) இறுத்திமலையின்மேலே கறுத்துச்சரற்காலத்தி
லிடைவிடாமற்பொழியுமழைபோலே - வீரர்
தெறித்தகணைகளெல்லாந்தாரகன்மேற்படாமற்
சிதறிவிடக்கண்டாரேகண்ணுலே.

(௰௬) தெய்வச்சரந்தொடுத்து மெய்யிலழுந்தாதாலே
சிந்தைமயங்கிவீரர் நின்ருரே - நின்று
வெய்யபாதகன்றன்னை அய்யன்குமரன் செங்கை
வேல்கொல்லுமென்றப்புறஞ் சென்ருரே.

(௰௭) சேனைத்தலைவர்செல்லக் கண்டுவீரகேசரி
சிலைவளைத்துக்கணைகள் தெறித்தானே - யந்த
ஆனைத்தலையசுரன் சேனைத்தொகுதியுங்கொன்
றவன்மணிமகுடத்தைத் தறித்தானே.

(௰௮) மகுடந்தெறிக்கமறு மகுடந்தரித்தசுரன்
வச்ரதண்டையவன்மேல் வீசினன் - இவன்
மிகமயங்கித்தெளிந்து பதினன்குகணைகளை
விடுத்திட்டவனையிகழ்ந் தேசினன்.

(௰௯) துடுக்குப்பேசியவீர கேசரிமார்பிலொரு
சூலம்பாதகன்விடுத் ததிர்த்தானே - வஞ்சன்
விடுத்தசூலத்தைக்கையால் பிடித்துமுறித்தெறிந்து
வீரவாகுசென்றெதிர் குதித்தானே.

வீரபாகுதேவர் தாரகனுடன் போர்புரிந்து அவனே முதுகிடச் செய்தபிறகு அசுரன் மாயத்தால் வீரபாகு உட்பட்ட சமஸ்த சயின்யமும் கிரவுஞ்சத்திற் சிக்கல்.

விருத்தம்.

புங்கவன் வீரவாகு போரினி லெதிர்க்கக் கண்டு
வெங்கண னசுரன் ருனும் வில்லெடுத் தெதிர்த்துக் கொண்டான்
சிங்கமா யிரங்கள் பூண்ட தேரினி லிவன்மேற் கொண்டு
பொங்கிய கடல்போற் சீறிப் போரிட்டா னேரிட் டானே. (௧௧)

(௧௧) கீர்த்தனம். இராகம் - அசாவேரி—அடதாளம்.

பல்லவி.

தீரன் வீரவாகுவன் தாரகாசுரனுடன்
செய்தனனே சண்டை.

அநுபல்லவி.

ஏர்பெருகுங்குமர னிணையடியைத் துதித்து
இடிந்துபூதப்படைகள் மடிந்ததையும் மதித்து
கோரவசுரர்களைக் கொல்வேனென்று துடித்து
குலிசப்படையுஞ்சேர்த்துச் சிலையுங்கையிற் பிடித்து (தீரன்)

சரணங்கள்.

(௧) மாயவசுரனுமோ ராயிரங்கணைவீர
வாகுதேவன்மேல்விழ வெய்தானே - நல்ல
தூயவீரவாகுவா யிரங்கணைபோட்டவன்
தொடுத்தகணையைப்பொடி செய்தானே - யதி
மாயமாமவனொரு நூறம்பு தொடுக்கவும்
மறுத்துமிவனூ றம்பு தொடுத்ததைத் தடுக்கவும்
ஆயபொழுதிலவன் சரமழை தூற்றவும்
அனுசனும்வெகுகணை தொடுத்ததை மாற்றவும்
தீயினம்பையந்தப் பாதகன் றெறிக்க
திரும்பத்தம்பியழற் கணைகொண்டு தறிக்க
நேயவருணத் திரத்தையவன் ஞெட்டு
நெறிக்கவக்கணைகொண் டறுத்துத் துகளிட்டு. (தீரன்)

(௨) வெய்யவனத்திர மவன்விடக்கண்டது
வேவிட்டுத்தம்பியும் விலக்கினன் - பின்னும்
பொய்யவுணன்வாயு வாத்திரந்தொடவிவன்
பொடிசெய்தவன்மனதைக் கலக்கினன் - இன்னம்
செய்யபிரும்மாத்திர மவன்விட்டுத் தாக்கவும்
சேயனதற்கது வேவிட்டுப் போக்கவும்
மையவன்சிந்தைம னத்தாபந் துன்னியே
மாயையினல்வெல்ல வேணுமென் றுன்னியே
மாயைத்தொழில்கள னேகவிதஞ் செய்ய
மயங்கிவீரப்படை தயங்கியனம் நைய
ஏகப்பெருங்கணை விடுத்து தடுக்கியே
இரவிமுன்பனிபோ லிதனை முடுக்கியே. (தீரன்)

(௯) செஞ்சரங்கள்பொழிந்து வஞ்சனேறியபரித்
தேரையுந் துண்டுதுண்டாய் நறுக்கினன் - மன
நெஞ்சியரிகண்ட குஞ்சரம்போன்முது
கிட்டவனேடிட நொறுக்கினன் - நேரில்
அஞ்சனமலைபோற்கர்ச் சனையிட்டெழுந்து நின்று
ஆறுமுகனைவெல்லப் போறேனினிப்பா ரென்று
நஞ்சனையவன்விண்ணை நாடிப்போய் மறையவும்
நற்சூரியனுமறைந் திட்டிரு ணிறையவும்
நடவையின்றிவீரப் படைகள் சோரவும்
நன்முனிசபித்த தொன்மை நேரவும்
படலெனக்ரவுஞ்சப் புடையுட் கவிக்கவும்
பதறியமரர்கள் கதறித் தவிக்கவும். (தீரன்)

இந்த சங்கதியை நாரதர் ஷண்முகனுக்குக்கூற ஷண்முகனும் கோபாவேசத்தோடு அசுரப்படைக்குட்சென்று கலக்குதல்.

விருத்தம்.

வீரர்களும் பூதர்களுங் க்ரவுஞ்சந் தன்னுள்
விரிவலைக்குட் சிக்கியபட் குலம்போ லேங்க
நாரதன்கண் டறிந்துகந்த ஸாமிக் கோத
நறுநெய்யைக் குடங்குடமாய் கவிழ்க்க வுண்ட
கூடரெரிபோற் பொங்கிரத மீதி லேறிக்
கொய்சிலைவா ளம்பொடும்பற் படையு மேந்தி
வாரிதிபோ லுறுமசுரப் படைக்குட் சென்று
வருத்தினன் றருமநிலை பொருத்தி னனே. (௩௪)

(௩௪) கீர்த்தனம். இராகம் - நாதநாமக்ரியை--அடதாளம்.

பல்லவி.

ஷண்முகனடித்தானே - யிந்தவிதமாய்ச்
சமர்செய்து முடித்தானே.

அநுபல்லவி.

ஷண்முகனடித்தானே - வண்மையைப்பிடித்தானே
தக்கபெருப்பூதரும் - மிக்ககணாதரும்
தம்பிமாரனைவோரும் - அம்பரமெனநேரும்
தாரகனெதிர்சென்று - போரிலடர்ந்துநின்று

சயித்தபொறுமையாலே - தைத்தியன்மாயையினுலே
தடக்ரவுஞ்சத்துட்பூட்டுண் - டிடக்குண்டாரெனக்கேட்டு
தணலெனவேவெகுண்ட - வுணசேனதனைக்கண்டட்
சணத்திற்கணைகள்பூட்டி முனைத்தசூர்களைவாட்டிச். (ஷண்)

சரணங்கள்.

(இரதகஜதுரகபதாதியென்ற நான்குபகுப்பினையுடைய
அசுரப்படையாவற்றையும் ஐயன் அழித்தல்).

(க) மதத்தகரிகளொக்கக் கதித்தடங்கலுமொய்க்க
மணித்துரகதங்களும் அணிப்பொன்னிரதங்களும்
வளமொத்ததானையும் அளவற்றசேனையும்
வார்கடலெனக்கோத்து நேர்வருவதைப்பார்த்து
மாயாபுரியின்கோட்டை வாயினில்ரணவேட்டை
வாய்த்ததுநமக்கின்று கீர்த்திநிலைக்குமென்று
மனங்கொண்டுகுறித்தானே வருபடையைச்
சினங்கொண்டுமறித்தானே அந்தவேளையில்
வல்லசுரர்களங்கெல்லை யின்றித்தளங்கள்
வாரநெதிரடுத்தாரே கந்தனுக்கென்றே
நேர்ந்துயிர்கொடுத்தாரே பின்னுநெருங்கி
மட்டடங்காதசேனை விஷ்ணுவின்மருகோனை
வளைந்திடநோக்கினனே கணைதொட்டவ
ருளைந்திடப்போக்கினனே யதையறிந்து
மனவேகமுடனேடி முனையசுரர்கள்கோடி
மறுத்துறவறிந்தானே யவர்களையும்
அறுத்தறுத்தெறிந்தானே யிவ்விதமாக
மண்டைகளழிந்தபேருந் தொண்டைகள்கிழிந்தபேரும்
மருமங்களழிந்தோரும் நினைத்திருந்த
வருமங்களொழிந்தோரும் கையிற்பிடித்த
வாளிழந்தவர்களும் தோளிழந்தவர்களும்
மதிகெட்டுலைந்தபேரும் கண்டெரியாமற்
கதிகெட்டலைந்தபேரும் இரதமுந்து
வசமும்பரிபாகன்க வசமுந்தூணியும்போய
வசங்கொண்டுவிழிப்பாரும் நமதுவிதி
வசமென்றுளொழிப்பாரும் மத்தகங்களில்
வதைக்குஞ்சரங்களிட்டு மதக்குஞ்சரங்கள்பட்டு

மலையெனக்குவிந்தனவே மேகங்கள்கானத்
கலையெனக்கவிந்தனவே மிகக்கலங்கி
மருண்டுபரிகள்கண்க ளிருண்டுசுருண்டுதொண்டை
வரண்டவனேகங்கோடி நிரைநிரையா
யுருண்டவனேகங்கோடி கருவங்கொண்ட
வம்பன்றன்படைகள்க டம்பன்றன்படைக்கன
லின்பஞ்சதெனப்போச்சே யசுரப்படைக்
கும்பஞ்சிவெறுப்பாச்சே பிடித்துவந்த
மதிக்குடைகளும்வெற்றி மலர்த்தொடைகளும்போய
வதிக்குடந்தையராகவே மீந்தவர்கள்தம்
பதிக்குடைந்தோடியேகவே தனிமையாலே
வலமுற்றசமராடி பலமுற்றனேகங்கோடி
வருக்கங்கள்முடிந்தனவே தேவருக்குற்ற
நெருக்கங்கள்விடிந்தனவே தவமுனிவர்
மகமெங்கும்நிறைவேறச் சகமெங்குங்களிப்பூற
மாமறைபுகழ்ந்தேத்த பூமிபாரத்தைமாற்றச் (ஷண்)

(ஐயன் தாரகனுடன் போர்புரிந்து அவனது துதிக்கையையும் நாற்கொம்புகளையும் அறுத்துத்தள்ளி அவன் இரதத்தையும் கொடியையும் அழித்தல்).

(உ) அந்தச்சேதியறிந்து சிந்தித்துமனநொந்து
ஆயிரம்பரிகொண்ட மாயவிரதத்தண்ட
மாயிரமுஞ்சுமந்த தீயசூரன்பின்வந்த
அடல்சேர்தாரகாசுரன் இடர்சேர்குணமீசுரன்
அட்டகாசங்களும்பண்ணி பட்டபேர்தங்களையெண்ணி
அலைக்கும்புலிபோற்சீறி மலைக்கண்மழைபோலேறி
அய்யனைக்கண்ணினிற்கண்டானே இவனோர்சிறு
பையனென்றெண்ணமுங்கொண்டானே இளமைவய
தானநீசண்டைசெய்யத் தானிணையோவையாநின்
னப்பனிடம்போவென்றானே உயிரிழக்க
வொப்பிலிங்கேவாவென்றானே சிங்கக்குருளை
அன்னைவயிற்றிற்செனித் துன்னும்பொழுதேமுனிந்
தானைத்திண்டிரள்வெல்லாதோ என்கைவேலுன்ற
னூனைத்தின்றுயிர்கொல்லாதோ கடிக்குங்குட்டி
யரவுக்குவிடமென்ன குறைவுறுமோபன்ன

டாவென்றையனுஞ்சிரித்தான் சிரிப்பதுகண்
டேமூடனார்ப்பரித்தான் ஆர்ப்பரித்துக்கொண்
டறுமுகன்மார்பின்முந்தக் கரிமுகவன்முனைந்தை
யாறிருகணைபூட்டினன் சிலவம்பையன்
றூறியதனையோட்டினன் மற்றுமசுரன்
ஆயிரங்கணைவிடச் சேயனதைத்தவிட
தாக்கிவில்லையுமொடித்தான் பின்னுஞ்சரங்கள்
தாக்கியொல்லையிலடித்தான் மறுவில்லெடுத்
தானைமுகன்றானுமலைச் சோனைமுகில்போலநிலை
யத்திரவருஷ நிறைத்தான் சாமியுங்கா
பத்திரம்விட்டதை மறைத்தான் மறைத்தவுடன்
அநந்தமாயிரமம்பைச் - சினந்தெய்தவனுடம்பை
அல்லிடைக்கனல்போல் விளைத்தான் இமைக்குமுன்னம்
சல்லடைக்கண்போலே துளைத்தான் துளைத்தப்புறம்
அதிர்க்கும் புதைகள்கொண்டு துதிக்கை கொம்பீரிரண்டும்
அரிந்துபுவியில் வீட்டினன் யாவருமுள்ளம்
பரிந்துமகிழக் காட்டினன் தொங்குகைகொம்பும்
அடித்து விழுந்துருண்டு துடித்திடுவதுகண்டு
அயர்வுற்றுள்ளுளை வாகினன் பயந்தசுரன்
துயரக்கடலின் மூழ்கினன் உடன்முழுமூக்
கறையன்படைக்கஞ்சானென் றிரதமீதேறிநின்
றைம்பதுகணைகளெய்தான் அதையுமையன்
ஐம்பதுகணையாற் கொய்தான் கொய்ததுமன்றி
அடுக்கிக்கணைகள்பூட்டிக் கடுக்கிமுனைபாராட்டி
ஆர்ப்பரித்தெதிரேநின்று நமன்பாலுன்னைச்
சேர்ப்பிவித்திடுவேனென்று சபதஞ்சொல்லி
அணிசேர்கொடிகடன்னைத் துணிசெய்ததற்குப்பின்னை
அடித்துத்தேரைநொறுக்கித் தடுத்தவனையுறுக்கி. (ஷண்)

(தாரகன் மூர்ச்சையடைதலும், பிறகு வந்துசூழ்ந்த அசுரர் மடிந்த இரணகள வர்னனையும், தாரகன் தெளிந்து பாசுபதமுத லியதெய்வப்படை விடுதலும் அவை ஐயன் கைவசமாவதும்).

(௩) துதிக்கையுடனேதந்தஞ் செதிக்கவுடனேயந்தந்
தொலைந்துமனமுங்குலை குலைந்துகலங்கிமலைச்
சுனையருவிபோற்சோரி நனையவேமறுதேறிற்
றன்பமுற்றுடனேறி யம்பாயிரமுந்தூறித்

தூண்டும்பாகனைத்தாக்க
தொல்லாயிரஞ்சரத்தை
துளைத்திசையேந்தினனே
குளத்திடை நீந்தினனே
சுண்டுபெருங்குருந்தடி
சுக்குத்தடிபொங்கைதரங்கு
பக்கத்திடைவந்துநெருங்கும்
சுடர்க்கணைவிட்டுவரும்
தூளியாய்நொறுக்கினனே
வாளினைநறுக்கினனே
துதிக்கும்விறற்சேனைகள்
சுற்றிமொய்ப்பாய்க்கவிந்தனவே
புற்றீசற்போலவிந்தனவே
சுரந்துகழுகோரியும்
சுரோணிதமுண்டுடலுதிக்கப்
திராணியைக்கொண்டாடித்துதிக்கக்
தோண்டிரத்தங்குடித்துத்
துள்ளுஞ்சிலதுபேய்கள்
விள்ளுஞ்சிலதுபேய்கள்
துடுக்கன்றேவாத்திரம்
தோன்றிநாரணனுத்திரம்
யீன்றவாரணனுத்திரம்
தொடுத்தவெல்லாங்கந்தனை
தொண்டுசெய்துவலம்வந்ததே
பிண்டுவெம்பிமிகநொந்ததே
துடுக்கானமொழிபேசி
துய்யசிவனடிபணிந்து
கையினிலெடுத்துத்துணிந்து
சூலமுற்கரம்பிண்டி
தொகையற்றசஸ்திரங்களும்
புகையுற்ற அஸ்திரங்களும்
சுற்றியுயிர்வதைத்துண்டு
சுயம்புபதத்தைநினைந்தான்
நயம்பெறவ்வதைப்புனைந்தான்
சோபமுமுற்றுமனத்

வாண்டகையதைப்போக்க
வில்லால்விடுத்துரத்தைத்
தாரகன் ரெத்தக்
அதுகண்டோடிச்
குண்டுகவண்வளைதடி
மெறிந்துநாலு
ம்பாதினிலையன்
படைக்கலங்களைக்கருந்
கையிற்பிடித்த
நறுக்கவும்பின்
கதிக்குந்திறற்ருனைகள்
சாமிகணையாற்
ரணகளத்திற்
பருந்துமிளநரியும்
புங்கவன்செய்த
கவந்தங்களைத்
தாண்டிக்கொண்டானடித்துத்
மகிழ்ந்துகவி
இதனைக்கண்ட
விடுக்கவென்ருத்திரந்
உலகந்தனை
முதற்படைகள்
யடுத்துவந்துவந்தனை
அசுரன்மனம்
நொந்துபாதகன்
முடுக்காயையனையேசித்
பாசுபதத்தைக்
விடுக்கவதிற்
பாலஞ்சக்ரமுசண்டி
கடைக்கனல்போற்
எழுந்துலகைச்
பற்றிவருவதைக்கண்டு
குமரன்கையில்
தீயவன்கண்டு
தாபமும்பெற்றுப்பரஞ்

சோதியிவனென்றுநப்பினான் றன்னுயிர்திலை
யாதினிமேலென்றுவெம்பினான் இவ்வகையாசத்
தோற்றுப்போரிலிடைந்து வேர்த்துமனமுடைந்து
துக்கித்தவன்றிண்டாடச் சொர்க்கத்தவர்கொண்டாட (ஷண்)

(பிறகுமாயையால் வெல்லநினைந்து அனேக இந்திரஜாலங்களைச் செய்ததாரகனையும் கிரவுஞ்சனையும் ஐயன்வேலைவிடுத்து ஸம்ஹரித்து வீரபாகுமுதலிய ஸமஸ்த சயின்யத்தையும் மீட்கல்).

(ச) இசையுந்துரகதமும் விசயமணிரதமும்
எதிர்க்கின்றபெருங்கும்பும் துதிக்கையீரிருகொம்பு
மெழில்சேர்பாசுபதமும் மொழிசேர்வாயின்மதமும்
இறையும்நிறையும்போகிச் சிறைபோனபக்ஷியாகி
இருகண்ணீரானனைந்து உருகிவிதியைநொந்து
இகல்சேர்மாயையால்வெல்லத் தகுமென்றெழுந்துமெல்ல
இருட்க்ரவுஞ்சத்துட்குதித்தான் மறைந்துவஞ்சம்
பெருக்குஞ்சத்தியைத்துதித்தான் அதனினின்றும்
இடிக்கும்பன்மேகங்கள் கடிக்கும்பன்னாகங்கள்
இமயம்பல்கந்தரமும் அஷ்டகஜமும்
அமையுந்தொல்புந்திரமும் திரிபுரமும்
எழில்கொடுவான்களும் குழுவொடுமீன்களும்
எரிக்கும்வடவைக்கனலும் உலகையப
கரிக்குங்கடைபிற்புனலும் மதமிகுத்த
எண்ணிலசுரப்படை நண்ணியேகனபுடை
எறியேவரக்கூவினான் உடன்பாதகன்
சீறியேரதமேவினான் களத்தினில்வந்
தேறுமாறுகண்மீறி வேறுவேறுருமாறி
ஈஞ்சாதந்திரஜாலம் போலவேயதி
விஞ்சையிந்திரஜாலம் செய்யுங்குரூரன்
இருப்பிடந்தனைமெல்லக் குறிப்பிட்டவனைக்கொல்ல
எதுசெய்வோமென்றுகாலைக் கதிரவன்போற்
சோதிசெய்யும்வென்றிவேலைத் திவ்யமலரா
லீசனைநினைந்துபக்தி பூசனைபுரிந்துசுற்றி
யின்றுநீயேசென்றுகலக்கி விநோதமுற்றுத்
துன்றுமாயையெல்லாம்விலக்கித் தாரகாசுரன்
இன்னுயிர்துஞ்சிடவாட்டி மன்னுக்ரௌஞ்சமும்வீட்டி

லெக்கித்தொன்பதுபேரையும் பூதரெனுநம்
பக்கத்தோரனைவோரையும் வீட்டிடுவாயென்
றிணங்கிக்குமரன்கூற வணங்கிக்கொண்டதிவீர
மேற்றெழுந்ததுவேலும் ப்ரளயகால
மூர்த்திருத்திரன்போலும் சூரனையிரத்
தெட்டண்டமும்வெடிக்க தட்டுண்டழல்துடிக்க
வெரிமுகஞ்சுரந்தோடி மாயையைநீக்கிக்
கரிமுகனுரந்தேடிக் கனலிடிபோ
லிடித்துத்துளைத்திரத்தங் குடித்துக்கிளைத்துச்சத்தம்
இட்டுக்ரௌஞ்சமும்பிளந்து எழுந்துசக
சிருஷ்டிப்ரபஞ்சமுமளந்து பின்புஸாமியை
யிறைஞ்சிமூவலம்வந்து கரஞ்சென்றினிதுறைந்து
இசையெங்குநாட்டியதே சோரனைக்கொன்று
விசயங்கள்காட்டியதே வீரர் பூதர்கள்
யாவருமெழுந்துமெள்ள மேவியன்புகந்துதுள்ள
யின்பமுற்றன்பர்கள்போற்ற வும்பர்கண்மலர்கள்தூற்ற. (ஷண்)

சந்தவிருத்தம்.

தருநிழ லமரர்கண் மறையவர் முனிவர்கள்
தளர்நடை யொடுமிக விடர்மேவித்
தலைமிசை கரமொடு வெருவிட வதலகு
தலமுறு மதிர்படை தனைவீசிக்
கருமுகி விறைவிடு திகிரியை மகிழ்வொடு
கலனென வணிபெரு பையினாலே
ககனமு மறைபட வுலவையு மசைவறக்
கதிர்நவ கிரகமு டுவினோடும்
இரவியு நிலைகெட வுரகமு நெளிபட
விடமிகு மொருகரு மலைபோலே
யிருளுரு வொடுபல மயலது விளைவுற
விகல்புரி கரிமுக வவுணேசன்
உரமது தொளைபட வரையது பிளவிட
வுகமுடி வினிலெழு கனல்போலே
உரமிகு தொழிலொடு கரமிசை யணுகின
தொருகும ரனிமல னணிவேலே. (௩௫)

தாரகனிறந்ததற்காக அவன்மனைவி சவுரி புலம்புதல்.

விருத்தம்.

அடற்றா ரகனிவ் வாறிறந்தா னவன்முன் விடுத்த பாசுபத
மதனைக் குமரன் றுணைவனிட மன்போ டீந்தா னமரர்பயம்
விடுத்தார் குமரன் மலர்த்தாளை மேவிப் பணிந்தி யாங்கள்பணி
விடைசெய் தேத்தும் படிக்குனருள் விளைத்துத் தேவ கிரிக்கணிசேர்
கடற்றா னைகளோ டெழுந்தருளக் கருணை புரியென் றுரைத்தமொழி
கருத்துக் கமுதாய்க் கொண்டுசென்றே காட்சி கொடுத்தங் கினிதிருந்
மூடித்தா ரகன்றன் மனைவிமதி முகத்தாள் கணவன் படுகளத்தின் [தான்
முசிந்து கிளிபோ லொப்பாரி மொழிந்தா ளழுதுள் ளொழிந்தாளே.(௩௬)

(௩௫) திபதை. இராகம் - எதுதலகாம்போதி—ஆதிதாளம்.

(௧) என்துரையேயவுணேசா - விண்ணோ
ரெவர்களுக்கும்பெரியசிங்கமே - ஐயோ
வன்கண்மையாய்வாழ்ந் ததினாலல்லவோ
வந்ததுனக்குமிப்போ பங்கமே.

(௨) என்பிராணநாயகிநீ உன்பிராணநாதனும்யா
னிணைபிரியேனெப்போது மென்றாயே - வீணில்
என்பிராணனிங்கிருக்க வுன்பிராணனைமீட்டிக்கொண்
டெவ்விடந்தனிலேநீ சென்றாயே

(௩) சிறியபகையென்பதைப் - பெரிதாயெண்ணாமல்மனம்
செருக்கினர்படுவரென் பதும்பேச்சே - யாக
உறுதியாயனைவர்க்குந் தெரியுஞ்சாக்ஷியாகவே
உன்றன்மட்டினிலது சரியாச்சே.

(௪) பரமசிவனுடைய வரமுங்கவசம்பாசு
பதமும்பெற்றுமகிழ்ச்சி சிறந்தாயே - நீ
தருமவழிசெல்லாம லூரமும்ரதகஜது
ரகமுஞ்சகலமும்போ யிறந்தாயே.

(௫) கார்முகில்வண்ணனுடன் போர்செய்துசக்கரத்தைக்
கழுத்தறுக்குங்கத்தியாய்ப் பூண்டாயே - யதின்
வீரியத்தைக்காட்டாம வீரச்சேலைபோட்டது
வேகழுத்தறுத்தாற்போன் மாண்டாயே.

(௬) முக்கண்ணன்முதற்றிரு மூர்த்திகளாலும்வெல்ல
முடியாதென்றேவிருது மொழிந்தாயே - செய்த
அக்ரமத்தாலழிந்துன் விக்ரமங்களுமிழந்
தவத்தினிலுயிர்கொடுத் தொழிந்தாயே.

(எ) அடாதுசெய்பவர்கள் படாதுபடுவரென்
நிடுத்துநான்சொல்லவெடு வெடுத்தாயே - மறைந்தும்
விடாதுகுமரன்கை வேலுன்னுயிர்குடிக்க
விருதாவினிலென்றனைக் கெடுத்தாயே.

(அ) ஆயுள்செல்வமும்பெற்று மாயாபுரிக்கோட்டையை
ஆண்டுநீசிறந்ததுபொய் யாச்சே - கனி
வாயன்குமரன்வைவே லாயுதத்தினுலின்று
மாண்டுநீபறந்தது மெய்யாச்சே.

தாரகன் இறந்ததை சூரபத்மன் கேட்டுக் குமரனோடு அமருக்கெழ எத்தனிக்கையில் மந்திரிமார்கள் அதற்கு இதுசமயமன்றெனத்தடுத்தல்.

விருத்தம்.

சவுரியிந்த விதம்புலம்பித் தழலில்விழுந் திறந்தாள்
தந்தைதாய் தமக்குமகன் றழற்கடனை முடிக்க
விவரமெலாந் தூதர்முன்போய்ச் சொலவறிந்து சூரன்
மிகக்கலங்கி யசுரேசன் றனைக்கையாற் றழுவி
மவுலிபுனை தாரகனை நினைத்திரங்கும் போது
மந்திரிகளாற் றேற்றவவன் றெளிந்துசினங் கொண்டே
சிவன்மகனை யுயிர்குடிப்பே னென்றெழுந்தா னவனைத்
தேற்றுதல்செய் தமைச்சர்கள்பின் னுற்றுதல்செய் வாரே. (௧௭)

(௧௬) கீர்த்தனம். இராகம் - சகானு - ஆதிதாளம்.

பல்லவி.

தீர்க்காலோசனை வேணும் - ராஜனேயுன்றன்
சினத்தைவிட்டிடுங்காணும்.

அனுபல்லவி.

ஏர்க்கும்புவியாயிரத் - தெட்டண்டங்களுங்கட்டி
யிசைமிகுந்திடுஞ்சூரா - விஜயரெணகம்பீரா. (தீர்)

சரணங்கள்.

(௧) இறந்ததம்பியையெண்ணி - வருந்தியழுதுமனம்
இப்படிநோகலாமோ - எல்லாம்
அறிந்துமெதிரிபலந் தெரிந்தாண்மைசெய்யாமற்கற்
றறிமோழையாகலாமோ - சும்மா

உறங்குமாயக்காரனே - விரைந்தெழுப் பினுற்போலே
ஒடுக்கமன்றி நீசெல்லத் - துடிக்கிரு யொருக்காலே
மறஞ்சேர் புரத்தைவென்ருேன் - மைந்தன் பகையினுலே
மதுவிந்துகலகம்போல் - வளர்ந்திடாமன் மென்மேலே. (நீர்)

(உ) சிறுபடையான்செல்லிடத் திருந்தாலுறுபடையான்
செருக்கழிந்துவிடாதோ - அந்தக்
குறிதெறியாமற்பித்த வெறிகொண்டவன்போல்வீணிற்
குதிக்கிருயென்னதீதோ - நேரில்
உறுமிப்பேசுவதெங்க ளொருவருக்கு மொவ்வாது
ஊர்க்குமுந்திநீதானே - போர்க்கேக வுங்கூடாது
பறந்தவன்பயனிழந் திடுவானது தப்பாது
பதருமலிருந்தல்லோ படுக்கவேணு மிப்போது. (நீர்)

(௩) சொன்மனவலிமையுந் தன்மனவலிமையுமாற்ருன்
துணைவலிமையும் ஆய்ந்து - அதன்
பின்னேநமதுபடை துன்னிமறிக்கூட்டத்திற்
பெருவேங்கையெனப் பாய்ந்து - நன்ரு
யுன்னியவனிருக்கை தன்னைவளைந்து நோக்கி
ஒறுத்துப்படைகளைவிட் - டறுத்துநின்று தூளாக்கி
மின்னுநமதுபேர்க்குக் குன்னமுரு மற்ருக்கி
வெற்றிகொண்டுதிரும்புஞ் சத்திகொண்டுசேர் ஆக்கி (நீர்)

சூரன் சேனன் முதலியஐந்து அசுரர்களை ஏவிக் குமரன் பலத்தை அறிந்துவரச்சொல்லல்; ஷண்முகநாதன் அனேகஸ்தலங்களை தரிசித்து தென்மதுரை நகர்க்குவந்து மீனுக்ஷிசுந்தரேசுவரரை தரிசித்துப் போற்றுதல்.

விருத்தம்.

அமைச்சருரை யாற்றெளிந்து சேன ஞதி
யைவர்களைக் குகன்வளமை யறியப் போக்கிக்
கமுக்கமுட னேயவுண னிருந்தா னப்பாற்
கந்தனும்பின் றெய்வகிரி கடந்து சென்றங்
குமைக்கதிபன் றலங்களெலாம் போற்றிச் சேய்ஞ
லூரிலா லயமமைத்தங் கரனைப் போற்றித்
தமைப்பகைத்தோர் களைக்களத்திற் கணத்திற்சர்வ
சங்காரஞ் செய்படைபெற் றிருந்தான் ருனே. (௧௮)

பின்னும் விருத்தம்.

காங்கய னந்தத் தலத்தினி லிருப்பக்
காழியிற் காரிபா லந்நாட்
கனகநாட் டரச னளித்ததன் மனைவி
கலனையக் கடவுளர் கொடுக்க
நீங்குதற் கரிய மயக்கமுற் றழன்று
நேரிழை பிரிவையாற் றுமு
னிலையிலாக் காமக் கடலினிற் குளித்தா
னீள்கதி ரவன்குணக் குதித்தான்
றேங்கமழ் கடம்பன் சேய்ஞலூர் நீங்கித்
தேவர்கோ னியாவருஞ் சூழத்
திருவிடை மருதூர் முதலிய தலங்க
டெரிசனஞ் செய்துபின் றென்பால்
பூங்கடம் படவி தன்னில்வந் தெய்திப்
பொற்கம லத்தடம் படிந்து
பூவையங் கயற்கண் பங்கினி லமர்ந்த
புனிதனைப் போற்றிசெய் தனனே. (௩௧)

(௩எ) கீர்த்தனம். இராகம் - தநாசி---ஆதிதாளம்.

பல்லவி.

ஸ்கந்தேஶ்வர=ஶாம் வாஹி மொா௨
ஸ்கந்தேஶ்வர—

அநுபல்லவி.

ஐ ந்ரு விஜா ந்ஸு தஞு லவ நவிஷ
கஸுரஶிஶு கஞா வந்ரு ஶெவர ஹரஶிவ-ஸுந.

சரணம்.

தூம்ர சுரி தஹவ=ஹம்ரவிழுவி தஹ
ஜம்ரஹ-ஞிஷண=சு நம்ரஉஹ நஜா
தம்ரஹர வ்ருஷ தூ-ரம்ரவ்ர கவிஷ்ர
ஷம்ர விஙாய ரண—ஜம்ரஜ கர வர ஶிவ—ஸுந—க

𑌜𑍍𑌞𑌾𑌨𑌨𑍍𑌦 𑌨𑌿𑌜𑌾𑌨𑌨𑍍𑌦𑌾𑌨𑌸𑌹𑌂𑌸𑌂
𑌵𑌾𑌨𑌨 𑌰𑌜𑌤𑌸=𑌹𑌾𑌟𑌕𑌨 𑌕𑌦𑌂𑌬
𑌕𑌾𑌨𑌨𑌨𑌿𑌵𑌸𑌿𑌤=𑌶𑍀𑌨𑌨𑌯𑌨𑌸𑌤𑌿
𑌆𑌨𑌨𑍍𑌦𑌶𑍈𑌲𑌕-𑌕𑍃𑌪𑌾𑌕𑍍𑌷𑌕𑌰 𑌶𑌿𑌵—𑌸𑌾𑌮𑍍𑌬—   உ.

𑌘𑍋𑌰𑌵𑌿𑌕𑍍𑌰𑌤𑌰𑌣-𑌶𑍀𑌰𑌸𑌾𑌜𑌬𑌨𑌂
𑌹𑍀𑌰 𑌧𑍀𑌰𑌵𑌾𑌰𑌵𑌂-𑌹𑌾𑌰 𑌧𑍀𑌰𑌜𑌮𑌥𑌾
𑌯𑌾𑌰 𑌨𑌿𑌭𑌸𑌂=𑌵𑌾𑌰𑌸𑌾𑌭𑌾𑌣 𑌶𑍃𑌂
𑌭𑌾𑌰 𑌸𑌾𑌜𑌨𑌂=𑌦𑌾𑌰𑌵𑌾𑌰𑌦𑌕𑌰 𑌶𑌿𑌵—𑌸𑌾𑌮𑍍𑌬—   உ.

பிறகு கந்தன் அம்மதுரைக் கருகிலிருந்த பாலை நிலத்தைத் திருப்பரங்கிரித் தலமாக்கி, பராசரரிஷி புதல்வரோடும் இந்திரன் முதலிய ஸமஸ்த தேவர்களுடனும் செந்தின்மாநகர் சேர்தல்.

விருத்தம்.

பாதலமே ழுடுருவி முளைத்த மூலப்
　　பசுபதியை யிவ்வாறு துதித்துக் கந்த
நாதனந்த வழியிலுறு பாலை தன்னை
　　நலமிகுதண் பரங்கிரியா யமைத்து மப்பாள்
மாதவன்ப ராசரன்றன் சேயர் வந்து
　　வணங்கவருள் புரிந்தவரோ டெழுந்து பாக
சாதனன்மா லயனெடுதென் கடல்வாய் தன்னைச்
　　சார்ந்திட்டான் செந்தினகர் சேர்ந்திட் டானே.   (௪௰)

(௧௮) **கீர்த்தனம். இராகம் - மோகனம்—ஆதிதாளம்.**

பல்லவி.

கந்தன்செந்தூரில் வந்தானே - தேவர்கள்செய்வி
ருந்துங்கொண்டங் கமர்ந்தானே

அனுபல்லவி.

வந்தனையன்பர்கள் பயந்தனைத்தீர்க்கவும்
சிந்தனையின்றியபீஷ் டந்தந்துகாக்கவும்.   (கந்தன்)

சரணங்கள்.

(௧) சந்திரகாந்தச் சிலையிற்பொன் னிழைத்து - ரத்னம்பதித்த
சாதகும்பஜோதியெங்குந் தழைத்து - ப்ரபலமாக
நின்றிறமையெல்லாங்காட்டி யுழைத்து - திவ்யவிமானம்
நிர்மிதஞ்செய்திடுவாயென் றழைத்து - இந்திரன்சொல்ல

துவிசுவகன்ட னந்தக்ஷண மதித்து
விந்தைபெறுந்தன்சிப்பி மந்திரத்தால் விதித்து
இந்துமண்டலத்தைப்பொ ருந்தச்செய்து துதித்து
வந்தவனும்வணங்கச் சிந்தையி லன்புதித்து. (கந்தன்)

(உ) பக்கம்லக்ஷவீரர் புடை யடுக்க - அருகேவீர
பாகுத்தேவனுங்கை லாகு கொடுக்க - வேதகோஷங்கள்
தக்கவேதியர் புகழ்ச்சி தொடுக்க - பேரிமேளங்கள்
சத்தமேகத்தின் றொனியை யொடுக்க - நாகவீரனே
டுக்ரதண்டன்சிங்கன முற்கண்ணனுடன் கூட
மிக்கண்டவாப்ரணன் விக்ரமநந்தி யாட
கக்கைவேத்திரங்கொண்டு றுக்கிக்கட்டியம் போட
வெக்களிப்புடனேபூ தக்கணங்கள்கொண் டாட (கந்தன்)

(ங) சித்தர்வித்யாதரர்வீணை படிக்க - அபிநயங்காட்டித்
தேவரம்பையர்கள்நட நடிக்க - மிகக்கலங்கி
மத்தவுணருளம்பறை யடிக்க - அவர்கள்மேவு
மங்கையர்க்குவலப்புயந் துடிக்க - ஸமுத்ரராஜன்
தத்துமலைக்கரத்தான் முத்துமணி யிறைக்க
சித்தமகிழ்ந்துதிறை வைத்ததுபோ னிறைக்க
சுற்றுங்கேதனங்கள் தொகுத்துவெளி மறைக்க
முத்தர்கள்வணங்கியே மொய்த்துப்பல்லாண் டுரைக்க (கந்தன்)

விருத்தம்.

கஞ்சமலர்ச் சரவணத்து ளுதித்த நாதன்
கமலன்மணி வண்ணன்முத லமரர் சூழ
மஞ்சினஞ்சூ ழிந்திரவி மான மீது
மகிழ்ச்சியொடு திருக்கொலுவுற் றருட்கணோக்கி
நஞ்சவுணர் செய்கையினை விடுக்க னுற்று
நைந்தவிண்ணாட் டிந்திரனை யினியெந் நாளு
மஞ்சலெனப் பணித்தபய வரப்ர சாத
மருளினா னருமறைமெய்ப் பொருளி னானே. (சச)

சம்பவகாண்ட முற்றுப்பெற்றது.

கீர்த்தனங்கள் ௩அ
விருத்தங்கள் ... ... சசு

நல்ல சமயம்! நல்ல சமயம்!!

ஸ்ரீமான் கவிகுஞ்சர பாரதியாரவர்க ளியற்றிய ஸ்காந்தப்ராண கீர்த்தனை அடியிற்கண்ட பன்னிரண்டு பாகங்களும், மாசம் மூன்று பாகங்களாகப் பிரசுரம் செய்யப்பட்டு, நான்குமாசத்திற்குள் முடிவுபெறும்.

பாகம். சம்பவ காண்டம்.

1. பார்வதி ஜெநநம், பார்வதி தவம், மன்மத தகனம், பார்வதி பரிணயம்.
2. சுப்பிரமண்ய ஜெநநம், ஸ்வாமி பால லீலை, தாரகாசுர சங்காரம், ஸ்வாமி திருச்செந்தூர் சேர்தல்.

அசுர காண்டம்.

3. சூரன் முதலிய அசுரருற்பத்தி.
4. மார்க்கண்டேய சரித்திரம்.
5. சூரன் வீரயாகம், அசுரரபிவிர்த்தியும் வெற்றியும், தேவதைகளின் க்ஷீணம்.

வீரமகேந்திர காண்டம்.

6. சூரனிடம் வீரபாகு தூது செல்லல், அதிசூரன் முதலியோர் வதம், வீரமகேந்திர நகர்ச்சிறப்பு, வீரபாகு சிறைச்சாலையில் சயந்தனைக்கண்டு தேற்றுதல்.
7. சூரன் கொலு, சூரனுக்கும் வீரபாகுவிற்கும் நடந்த சம்வாதம், வீரமகேந்திர நகரை அழித்தல், வஜ்ரபாகுவதம், வீரபாகு திருச்செந்தூர் திரும்பிவரல், சூரன் மந்திராலோசனை.

உயுத்த காண்டம்.

8. பானுகோபன் முதனாட் போர், சூரபத்மன் முதனாட் போர், பானுகோப னிரண்டாநாட் போர்.
9. மற்றய அசுரர்கள் வதம்.
10. பானுகோபன் வதம், சிங்கமாசுர வதம், சூரசங்காரம்.

தேவ காண்டம்.

11. தெய்வகுஞ்சரி பரிணயம், இந்திர பட்டாபிஷேகம்.
12. வள்ளி பரிணயம்.

ஒவ்வொரு பாகத்தின் விலை அணா இரண்டு.

1914-ம் வருஷம் ஏப்ரல் மீ 15-தேதிக்குள் முன்பணம் அனுப்புகிறவர்களுக்குப் பன்னிரண்டு பாகங்களும் ரூபா **1-0-0**-க்கு அச்சிட்ட உடனுக்குடனே கொடுக்கப்படும். வெளியூரார்கள் தபால் சார்ஜுக்காக **அணா-6** சேர்த்து அனுப்பவேண்டும். அவ்வாறு விரும்பினால் முதல் பாகத்தை ரூபா 1-6-0-க்கு வீ. பி. போஸ்டிலனுப்புகிறோம்.

அடியிற் கண்டவர்களிடம் கிடைக்கும்.

N. கோடீசுவர ஐயர், B. A., டிரான்ஸ்லேடர், ஹை கோர்ட்டு,

63, கச்சேரி ரோட்டு, மயிலாப்பூர், மதராஸ்

அல்லது,

வீ. கல்யாணராமய்யர் அண்டு கோ,

புக்ஸெல்லர்ஸ், எஸ்பிளனேட், மதராஸ், E.